**செய்தி வெளியீடு:581** **நாள்: 12.12.2016**

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பேரிடர் காலங்களில் மக்களை பாதுகாப்பதில் முனைப்புடன் செயல்படுகிறது.**

# 108 ஆம்புலன்ஸ் சேவை மையத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் கள ஆய்வு

***

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் அரசு, பேரிடர் காலங்களில் மக்களை பாதுகாப்பதில் முனைப்புடன் செயல்படும் என்பது அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் வங்கக்கடலில் வர்தா புயல் வலுவடைந்து பலத்த காற்றுடன் மழை பெய்து வரும் நிலையில், மழை மற்றும் காற்றினால் பாதிக்கப்பட்டவர்களை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்து உயிர்களை காப்பாற்றுவதில் 108 ஆம்புலன்ஸ் சேவை தற்போது எந்தவித தொய்வும் இல்லாமல் தொடர்ந்து பொதுமக்களுக்கு சேவை அளிப்பதை உறுதிபடுத்தும் வகையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (12.12.2016) கள ஆய்வு செய்தார்.

முன்னெச்சரின்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகாக 100 நடமாடும் மருத்துவக்குழுக்களும், 50 உணவு பாதுகாப்பு அலுவலர்கள் அடங்கிய குழுக்களையும் மேலும் 50, பூச்சியல் வல்லுநூர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கொண்ட குழுக்களையும் ஏற்படுத்தி 113 என்னிகையில் 108 அவசர ஊர்திகளையும் உடனடி தேவைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. “108” தொலை தொடர்பு சேவை மையத்தில் “0” call waiting சேவையளிக்க ஏதுவாக அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பலமான காற்று வீசுவதால் சாலைகளில், விழும் மரங்களை அப்புறப்படுத்தி போக்குவரத்து தடைநீக்கம் ஏதுவாக “Tree cutter”களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவசர ஊர்தி சேவையுடன் ஏனைய காவல்துறை மற்றும், தீயனைப்புத்துறைகளின் ஒருங்கிணைப்பு வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு, அவசர சிகிச்சை அளிக்க, மருத்து மாத்திரைகளும் பாப்புகடிக்கான மருத்துகளும் போதியளவில் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது.

புயல் மழைக்குப்பின், தண்ணீரால் பரவும் தொற்றுநோய் தடுப்பு முன்னெச்செரிக்கை நடவடிக்கைகளும் போதிய அளவில் எடுக்கப்பட்டுவருகிறது. சென்னை அரசு பொது மருத்துவமனையில் மருத்துவக்குழுகள் உருவாக்கப்பட்டு அவசர சிகிச்சையளிக்க போதிய வசதிகளும் தயார் நிலையில் உள்ளன மேலும் சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் போதிய ஆக்சிஜன் கையிருப்பில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவை தனியார் மருத்துவமனைகளுக்கும் தேவையிருப்பின் உடன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் அரசு எப்பொழுதும் மக்களை பாதுகாப்பதில் அரசு முனைப்புடன் தொடர்ந்து செயல்பட்டு வருவதை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இவ்வாய்வின்பொழுது மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப.,, மற்றும் உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**